DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI. CC-105/2023

Prosecution witness – PW 5

| | | |
|---|---|---|
| Name | : திரு.சதாசிவம் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

05.03.2026 – 03.25 PM

முதல் விசாரணை:–

1. நான் சேரந்தை கிராமத்தில் குடியிருந்து கடற்தொழில் செய்து வருகிறேன்.

2. கடந்த 09.03.2023ம் தேதி நானும் எனது நண்பர் குணசேகரன் என்பவரும் கிருஷ்ணாபுரம் விலக்கின் அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது வாலிநோக்கம் போலீசார் விபத்து சம்மந்தமாக அந்த இடத்தைபார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 09.03.2023ம் தேதி விசாரணை செய்தார்கள், அதற்கு பின்னர் என்னை விசாரணை செய்யவில்லை. எத்தனை போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் 2, 3 போலீசார்கள் இருந்தார்கள். போலீசார் எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் தற்போது ஞாபகமில்லை. சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் மங்களாக இருந்தது. போலீசார் கைவிளக்கு வெளிச்சத்தில் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். போலீசார் என்னிடம் எத்தனை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஒரே ஒரு பேப்பரில் கையெர்பபம் பெற்றார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் கீழே எத்தனை பேப்பர்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு

தெரியாது என்றால் வீரன் இறந்தது சம்மந்தமாக எழுதியிருந்தது. படம் வரைந்து இருந்தார்களா என்றால் படம் வரைந்து இருந்தார்கள். எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். சம்பவ இடத்திற்கு வடக்கே சாலை உள்ளது. கிழக்கு மற்றும் மேற்கே வயல்கள் உள்ளது அது யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன வீரன் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கிருஷ்ணாபுரத்திற்கு செல்ல வேண்டுமெனில் ஒரே பாதை வழியாகதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் எதையாவது கைப்பற்றினார்களா என்றால் வீரனின் இருசக்கர வாகனம் இருந்தது. நான் சொல்வது போல் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்யவில்லை என்றாலும், காயம்பட்டு இறந்து போன நபர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவருடைய குடும்பத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:36:44 +0530